ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1835/12 - 2013 නොවැම්බර් මස 05 වැනි අඟහරුවාදා - 2013.11.05

*1835/12 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 05 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும்

(முத்திரை)

மஹிந்த ராஜபக்ஷ.

**சனாதிபதியின் பணிப்புரை**

அரச துறையின் சம்பளங்கள் உட்பட சகலவித உழைப்பூதிய கட்டமைப்புக்களை மீண்டும் மீளாய்வு செய்து முழுமொத்த அரச துறையைப்போன்று தனியார் துறையினதும் மனிதவலுத் தேவைகளைத் தகுந்தவாறு பூர்த்தி செய்வதை இலகுபடுத்தும் பொருட்டான தேசிய சம்பளக் கொள்கை ஒன்றை வகுத்தமைப்பதில் அரசாங்கத்துக்கு அறிவுரை வழங்கல் மற்றும் உதவும்பொருட்டு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 33 ஆம் உறுப்புரையின் வண்ணம் அதியுத்தமராம் சனாதிபதி அவர்கள் தனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைப் பிரயோகித்து விசேட முகவராண்மையொன்றைத் தாபித்தல்.

1. தொன் ஹர்பட் நெவில் பியதிகம அவர்கள்
2. ஜயலத் ரணசிங்க விமலசேன திசாநாயக்க அவர்கள்
3. குணசேகர லியனகே விமலதாச சமரசிங்க அவர்கள்
4. விஜயலக்சுமி ஜெகராசசிங்கம் அவர்கள்
5. கினிகத்தரகே பியசேன அவர்கள்
6. ரணதுங்க அப்புஹாமிலாகே தோன ரூபா மாலினி பீரிஸ் அவர்கள்
7. தயானந்த விதானகமச்சி அவர்கள்
8. செம்பகுட்டிகே சுவர்ணஜோதி அவர்கள்
9. பெனடிக் கருணாஜீவ உல்லுவிஸ்ஹேவா அவர்கள்
10. சுஜீவ ராஜபக்ஷ அவர்கள்
11. ஹர்ஷ வர்ணகுல பெர்ணாந்து அவர்கள்
12. பேராசிரியர் சம்பத் அமரதுங்க அவர்கள்
13. கலாநிதி ரவி லியனகே அவர்கள்
14. வெகபிட்டிய கட்டடியலாகே ஹேமசந்திர வெகபிட்டிய அவர்கள்
15. கீர்த்தி கொட்டகம அவர்கள்
16. ரியாஸ் மிஹுலர் அவர்கள்
17. பிரியந்த பெர்ணாந்து அவர்கள்
18. லெஸ்லி ஷெல்டன் தேவேந்திர அவர்கள்
19. விஜேசிங்க வெல்லப்பிலி தொன் சுமித் விஜேசிங்க அவர்கள்
20. கம்பஹலகே தொன் சோமவீர சந்திரசிறி அவர்கள்
21. வல்கம ஹேவாமலுவகே பியதாச அவர்கள்



இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

*வாழ்த்துக்கள்!*

*மூன்று தசாப்த காலமாக நிலவிய பயங்கரவாதச் செயல்கள் முடிவுற்றதும், புதிய வலுவுடன் ஆரம்பிக்கப்பட்ட அபிவிருத்தி அணுகுமுறையினுள், அரசாங்கத்தினால் திட்டமிடப்பட்டுள்ள துரிதகதியிலான பொருளாதார அபிவிருத்தி இலக்குகளை அடைவதில் தனியார் துறைக்குத் தேவையான சிரம வளங்களைக் கவனத்திற்கொண்டு, வினைத்திறமையுடன் அரச சேவையளிப்பதையும் அபிவிருத்திச் செயல்நெறியை இலகுபடுத்துவதையும் தேவைப்படும்போது ஒழுங்குபடுத்துவதையும் பயனளிக்கக்கூடியவகையில் நிறைவேற்றத்தக்க திறமைகளுடன் கூடிய ஆளணிகளை அரச சேவையில் சேர்த்துக்கொண்டு சேவையில் வைத்துக்கொள்ளக் கூடிய சம்பளங்கள் வேதனங்கள் மற்றும் பல ஊக்குகைகள் உள்ளடங்கிய முன்மொழிவுகள் கொத்தொன்றை அறிமுகப்படுத்த அரசாங்கம் எதிர்பார்த்திருப்பதாதலாலும்,*

*அத்துடன், ஒவ்வொரு துறைக்கும் மனித வளங்களை ஈடுபடுத்தும்போது பொருளாதாரத்தில் ஏற்பாட்டுக் கொண்டிருக்கும் கட்டமைப்பு ரீதியான மாற்றங்களைக் கருத்திற் கொள்ளுதலும் சர்வதேச ரீதியிலான போட்டிகரத் தன்மையின்போது ஆளணியின் உற்பத்திப் பெருக்கத்தை உயர்வடையச் செய்வதன்மூலம் ஆளணிச் செலவுகளை இலங்கைக்குச் சலுகையாக அமையும் வகையில் போட்டிகரமான தரத்திற்குக் கொண்டுவர வேண்டுமென்பதும் தென்பட்டிருப்பதாதலாலும்,*

*அத்துடன், மனிதவலுத் தேவைகளைப் பூர்த்திசெய்து கொள்ளும்போது ஒட்டுமொத்த அரச துறைக்கும் தனியார் துறைக்கும் இடையிலும் அரச துறையினுள் பல நிறுவனங்களுக்கு இடையிலும் பாதகமான போட்டிகரத் தன்மை ஏற்படுவதைத் தவிர்த்துக்கொள்ள எதிர்பார்த்திருப்பதாதலாலும்,*

*அத்துடன், பொருளாதார அபிவிருத்தி செயல்நெறியினுள் அரச துறையினது செயற்பொறுப்பை வினைத்திறமையாக நிறைவேற்றத்தக்கதான மிகச் சிறந்த தொழில்சார் ஆளணிகளை அரச துறையின்பால் கவரச்செய்வது தற்கால திறமுறைகளினுள் கடினமாக உள்ளதால் அதற்குப் பொருத்தமான விசேட திறமுறைகளை அறிமுகப்படுத்தும் தேவை அரசுக்கு உள்ளதாதலாலும்,*

*அத்துடன், முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் தற்காலத்தின் விசேட தேவைகளை கருத்திற்கொண்டு அரச துறைசார்ந்த சகல நிறுவனங்களினாலும் நிறைவேற்றப்பட வேண்டிய செயற்பொறுப்பை மீளாய்வு செய்யும் போதும் குறித்த செயற்பொறுப்பை நிறைவேற்றத் தேவையான ஆளணிப்பற்றி ஆராய்ந்து பார்த்து புதிய பதவிகளை ஏற்படுத்தும்போதும் தேவைப்படும் சந்தர்ப்பங்களில் அறிவுரை வழங்கும் அல்லது வழிகாட்டும் தேவை இருக்கின்றதாதலாலும்,*

*அத்துடன், மஹிந்த சிந்தனை கொள்கைப் பிரகடனத்தில் காட்டப்பட்டுள்ளவாறு அரச துறையைப்போன்று தனியார் துறையிலும் சேவைபுரிவோரின் முன்னேற்றத்திற்கான கொள்கைகளை அமுல்படுத்தும் கட்டுப்பாட்டை அரசு கொண்டிருப்பதாதலாலும்,*

*அத்துடன், சொல்லப்பட்ட குறிக்கோள்களை எய்தும்பொருட்டு இதனகத்துப் பின்னர் குறிப்பிடப்படும் விடயங்கள், குறித்து அதாவது,*

*(அ) பின்வரும் விடயங்களைக் கருத்திற்கொண்டு மாகாண அரச சேவை, படைதாங்கு சேவைகள் உள்ளடங்கிய அரச சேவை, திரட்டிய நிதியிலிருந்து சம்பளம் செலுத்தப்படும் விசேட நிறுவனங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள், அரச கம்பனிகள், அரச தொழில்முயற்சிகள், இலங்கை மத்திய வங்கி அடங்கலான அரச வங்கிகள், பிற நிதிசார் நிறுவனங்கள், சகல ஒழுங்குபடுத்தல் நிறுவனங்கள் உள்ளிட்ட முழுமொத்த அரச துறையின் சகல பிரிவுகள் என்பவற்றின் சம்பளங்கள் மற்றும் வேதனங்கள், நிதிசார் உழைப்பூதியங்கள் மற்றும் நிதிசாரா வேறு பலவகையான வசதிகளைத் தொடர்ந்து மீளாய்வொன்றுக்கு உட்படுத்துவதை அடிப்படையாகக்கொண்டு மேற்போந்த நோக்கங்களை அடைவதற்காக வழிவகுக்கும் தேசிய சம்பளங்கள் மற்றும் வேதனக் கொள்கையொன்று பற்றி அரசுக்கு ஆலோசனை வழங்குதல்.*

(i) *அரசாங்கத்தின் சமூக, பொருளாதார கொள்கைகளை மிக அர்த்தபூர்வமாக அமுல்படுத்தும் பொருட்டு தற்காலத்திலும் வருங்காலத்திலும் அரச சேவைக்காகத் தேவையான முகாமைத்துவ, விஞ்ஞான, தொழில்நுட்பத் துறைகளில் நிபுணத்துவ அறிவுடன்கூடிய அனுபவசாலிகளை அரசதுறையின் தொடர்புடைய பிரிவுகளை கவரச்செய்யும் வகையில் தொழில் நிலைமைகளில் ஏற்படுத்த வேண்டிய மாற்றங்கள்.*

(ii) *இதற்கு முன்னர் நியமிக்கப்பட்ட சம்பள ஆணைக்குழுப் பரிந்துரைகளின்படிஅல்லது ஒவ்வொரு சந்தர்ப்பங்களின்போது சந்தர்ப்ப சூழ்நிலைகளின்படி மேற்கொள்ளப்பட்ட சம்பள அதிகரிப்புகளினால் எழுந்துள்ள தற்போதைய சம்பள முரண்பாடுகளைச் சீராக்கும் தேவை.*

(iii) *அரச துறையில் போன்று தனியார் துறையிலும் தொழில்புரிவோரை திருப்தியடைந்தவர்களாகவும் ஊக்கமுடையவர்களாகவும் இருக்கச் செய்யும் தேவை.*

(iv) *அதிக விளைவுப் பெருக்கத்தையும் வினைத்திறமையையும் பெற்றுக்கொள்ளும் வகையில் அரச சேவையை வழிநடாத்த வேண்டிய தேவையைப் போன்று தனியார் துறையின் மனிதவலுத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு உள்ள தடைகளை நீக்கும் தேவை.*

(v) அரசாங்கத்தின் மீண்டுவரும் செலவுகள் மிக உயர்ந்த மட்டத்தில் இருப்பதைக் கருத்திற்கொண்டு சமர்ப்பிக்கப்படும் முன்மொழிவுக்கொத்து அரசாங்க நிதி எல்லைக்குட்பட்டு அமுல்படுத்தக்கூடியதாக இருத்தல்.

(ஆ) 06/2006 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையை அமுல்பத்தும்போது இனம்காணப்பட்டுள்ள சம்பளங்கள், பணித் தொகுதிகள் மற்றும் சேவைப் பிரமாணங்கள் தொடர்பான பிரச்சினைகளைப் போன்று சந்தர்ப்பத்திற்கேற்றவாறு மேற்கொள்ளப்பட்டுள்ள சம்பள அதிகரிப்புகளினால் தற்போது எழுந்துள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ள முரண்பாடுகளைக் குறைக்கும்பொருட்டு அரசுக்கு முன்மொழிவுகளைச் சமர்ப்பித்தல்.

(இ) சமமான பொறுப்புக்கள் வகிக்கும் அல்லது சம தகைமைகளைக் கொண்டிருக்கும் தொழில்புரிபவர்களினால் அரச துறையிலும் பகுதி அரச துறைகளிலும் பெறப்படும் சம்பளங்கள் வேதனங்கள் மற்றும் படிகள் என்பவற்றிற்கு இடையில் முரண்பாடுகள் இருப்பின் அவற்றைக் குறைந்த மட்டத்திற்குக் கொண்டுவருவதற்காக வழிகாட்டும் சம்பள வேதனக் கட்டமைப்பொன்றைப் பற்றி அரசுக்கு முன்மொழிவுகளைச் சமர்ப்பித்தல்.

(ஈ) அரச சேவையில் நிரந்தரப் பதவி வகிக்கும் தொழில்சார் தகைமைகளையும் செயற்றிறன்களையும் கொண்டுள்ள உத்தியோகத்தர்கள் அரச சேவையைக் கைவிட்டு பகுதி அரச சேவையிலும் தனியார் துறைகளிலும் சேவையில் சேர்வதற்குச் செல்வதைத் தவிர்த்துக்கொள்ளும் பொருட்டு குறித்துரைக்கப்பட்ட சம்பள வேதன மீளமைப்புகளை இடையிடையே அரசுக்குப் பரிந்துரைத்தல்.

(உ) சில அரச நிறுவனங்களினால் தற்காலத்தில் செயற்படுத்தப்படும் பணிக்கொடைகள் உட்பட பல வகையான ஊக்குவிப்பு முறைகள் மற்றும் கொடைகளை மீளாய்வுக்கு உட்படுத்தி பணிக்கொடைகள், பலவகையான ஊக்குகைப் படிகள் மற்றும் நிதிசாரா ஊக்குவிப்புக்கள் பற்றி தீர்மானிக்கும்பொருட்டு மிகச் சிறந்த திறமுறைகள் பற்றிப் பரிந்துரைத்தல்.

(ஊ) அரச சேவையின் உழைப்பூதியங்கள் குறித்து அரசினால் பிரகடனப்படுத்தப்படும் சம்பளத் திருத்தங்கள் அல்லது கொள்கை ரீதியான தீர்மானங்களின் வண்ணம் எந்தவோர் அரச நிறுவனத்தினது அல்லது நிறுவனங்களது உதவி பெற்றுக்கொண்டு தேவைக்கேற்றவாறு அரச சேவையின் சேவைப் பிரமாணங்கள், ஆட்சேர்ப்புத் திட்டங்கள் அல்லது பதவி உயர்வுத் திட்டங்கள் என்பவற்றைத் திருத்துதல் அல்லது மீளாய்வு செய்தல் தொடர்பாக உரிய அதிகாரிகளுக்கு பரிந்துரைகளைச் சமர்ப்பித்தல்.

(எ) சம்பளங்கள் மற்றும் வேதனங்கள் அல்லது அத்துடன் இணைந்த கருத்துபேதங்கள் தொடர்பிலும் ஆட்சேர்ப்புத் திட்டங்கள், பதவி உயர்வுத் திட்டங்கள் அல்லது சேவைப் பிரமாணங்கள் சார்ந்த பேதங்கள் தொடர்பிலும் ஓர் நடுத்தீர்ப்பாளராக செயற்படுதலும் அவற்றை இணக்கம் செய்வதற்காகத் தொடர்புடைய அதிகாரிகளுக்கு பரிந்துரைகளைச் சமர்ப்பித்தலும்.

(ஏ) அரச துறையின் சம்பளங்கள் மற்றும் சேவை நிபந்தனைகள் தொடர்பாக ஏற்படும் பிணக்குகளைத் துரிதமாக இணக்கம் செய்யும்நோக்கில் சொல்லப்பட்ட பிணக்குகளைத் தீர்ப்பதற்குத் தேவையான தீர்வுகளைச் சமர்ப்பிக்கும்பொருட்டு அதிகாரத் தத்துவமுள்ள நிறுவனமொன்றை (நடுத்தீர்ப்புச் சபை) தாபித்தல் குறித்து இரண்டாயிரமாம் ஆண்டு யூலை மாதம் இருபதாம் திகதி நியமிக்கப்பட்ட சம்பள ஆணைக்குழுவினால் செய்யப்பட்டுள்ள முன்மொழிவை அமுல்படுத்துவதற்கு ஆரம்ப நடவடிக்கை எடுக்கும்பொருட்டு அரசுக்குப் பரிந்தரைகளைச் சமர்ப்பித்தல்.

(ஐ) முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தினால் அரசதுறைக்கு புதிதாக பதவிகள் ஏற்படுத்தப்படும்போது உரிய சந்தர்ப்பங்களில் வேண்டிய ஆலோசனைகளையும் வழிகாட்டிகளையும் வழங்குதல்.

(ஒ) அண்மைக்காலத்தில் நிகழ்ந்ததுபோன்று வருங்காலத்தில் நிகழக்கூடியவாறான சம்பள அதிகரிப்புகளாலும் உத்தேச ஆயுட்காலம் கூடிவிட்டமையாலும் அரசாங்க ஓய்வுச் சம்பளங்களுக்காக ஈடுசெய்யும் செலவுகள் உயர்ந்து செல்வதைக் கருத்திற்கொண்டு ஓய்வுச் சம்பளம் செலுத்துதல் தொடர்பான திறமுறையொன்றைப்போன்று அரச சேவையிலிருந்து ஓய்வு பெறுவதன் வயதெல்லை குறித்தும் அரசுக்குப் பரிந்துரைகளைச் சமர்ப்பித்தல்.

(ஓ) தனியார் துறையின் ஆளணிகளுக்காக மிகத்தகுந்த அத்துடன் குறைந்தபட்ச சம்பளமும் தொழில் பாதுகாப்பும் அவர்களுக்கு உரிமையாக வேண்டிய அத்தியாவசிய நலன்புரி வசதிகளும் கிடைக்குமென்பதை உறுதிசெய்தலும் அதன்மூலம் அவர்களது முன்னேற்றத்திற்காக மஹிந்த சிந்தனை கொள்கைப் பிரகடனத்தில் உள்ளடங்கிய அரச கொள்கையை அமுல்படுத்துதல் பற்றியும் அரசுக்குப் பரிந்துரைகளைச் சமர்ப்பித்தல்.

(ஔ) நாட்டின் மனிதவலு வளத்தை அரசதுறை மற்றும் தனியார் துறையினால் நாட்டின் அபிவிருத்திக்காக உயர்ந்த மட்டத்தில் பயன்படுத்துவதற்கு உரியவாறான வேறு முன்மொழிவுகளை அரசுக்குச் சமர்ப்பித்தல்.

ஆகிய விடயங்கள் பற்றி அரசாங்கத்துக்கு ஆலோசனை வழங்குவதற்கும் ஆதரவளிப்பதற்குமாக தேசிய சம்பள குழுவொன்றை (இதனகத்துப் பின்னர் ஆணைக்குழு எனக் குறிக்கப்படும்) தாபிப்பதற்கு அரசாங்கம் உத்தேசித்திருக்கின்றதாதலாலும்,

அத்துடன், சட்டமொன்றின் மூலம் அத்தகையதொரு ஆணைக்குழு தாபிக்கப்படும் வரையில் மேலே இனங்காணப்பட்டுள்ளவாறு குறித்த ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கும் பணிகளையும் பொறுப்புகளையும் நிறைவேற்றுவது பொதுமக்கள் நலனுக்காக உடனடியாக ஆரம்பிக்கப்பட வேண்டும் என நான் கருதுகின்றேனாதலாலும்,

சனாதிபதி, மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 33 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளின் வண்ணம் மேலே சொல்லப்பட்ட பணிகளையும் பொறுப்புகளையும் ஏற்று நிறைவேற்றும்பொருட்டு தேசிய சம்பள ஆணைக்குழுவை இத்தால் தாபிக்கின்றேன்.

அத்துடன், உங்கள் விவேகம், நேர்மை என்பன பற்றி மிகுந்த நம்பிக்கையும் பற்றுறுதியும்கொண்டு இதன்மூலம் சொல்லப்பட்ட –

1. தொன் ஹர்பட் நெவில் பியதிகம அவர்கள்
2. ஜயலத் ரணசிங்க விமலசேன திசாநாயக்க அவர்கள்
3. குணசேகர லியனகே விமலதாச சமரசிங்க அவர்கள்
4. விஜயலக்சுமி ஜெகராசசிங்கம் அவர்கள்
5. கினிகத்தரகே பியசேன அவர்கள்
6. ரணதுங்க அப்புஹாமிலாகே தோன ரூபா மாலினி பீரிஸ் அவர்கள்
7. தயானந்த விதானகமச்சி அவர்கள்
8. செம்பகுட்டிகே சுவர்ணஜோதி அவர்கள்
9. பெனடிக் கருணாஜீவ உல்லுவிஸ்ஹேவா அவர்கள்
10. சுஜீவ ராஜபக்ஷ அவர்கள்
11. ஹர்ஷ வர்ணகுல பெர்ணாந்து அவர்கள்
12. பேராசிரியர் சம்பத் அமரதுங்க அவர்கள்
13. கலாநிதி ரவி லியனகே அவர்கள்
14. வெகபிட்டிய கட்டடியலாகே ஹேமசந்திர வெகபிட்டிய அவர்கள்
15. கீர்த்தி கொட்டகம அவர்கள்
16. ரியாஸ் மிஹுலர் அவர்கள்
17. பிரியந்த பெர்ணாந்து அவர்கள்
18. லெஸ்லி ஷெல்டன் தேவேந்திர அவர்கள்
19. விஜேசிங்க வெல்லப்பிலி தொன் சுமித் விஜேசிங்க அவர்கள்
20. கம்பஹலகே தொன் சோமவீர சந்திரசிறி அவர்கள்
21. வல்கம ஹேவாமலுவகே பியதாச அவர்கள்

ஆகிய நீங்கள் தேசிய சம்பள ஆணைக்குவின் உறுப்பினர்களாக இத்தால் என்னால் நியமிக்கப்படுவதுடன், மேலே (அ) முதல் (ஔ) வரையுள்ள கருமங்களைச் செயற்படுத்துவதற்கு அவசியமானவாறான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு இத்தால் நான் உங்களைப் பணிக்கின்றேன்.

அத்துடன், தொன் ஹர்பட் நெவில் பியதிகம அவர்களையும் ஜயலத் ரணசிங்க விமலசேன திசாநாயக்க அவர்களையும் ஆணைக்குழுவின் இணைத் தவிசாளர்களாகவும் பந்துலசிறி விஜயரத்ன அவர்களை ஆணைக்குழுவின் செயலாளராகவும் நான் இத்தால் மேலும் நியமிக்கின்றேன்.

அத்துடன், இதன்மூலம் பொறுப்பளிக்கப்படும் கருமங்களை நிறைவேற்றுவது தொடர்பில் அவசியமானவாறு விசாரணைகளை மேற்கொள்வதற்கும், விடயங்களைப் புலனாய்வு செய்யும்பொருட்டு ஆலோசனைகளை வழங்குவதற்கும் ஆணைக்குழுவிற்கு இத்தால் நான் தத்துவம் அளிக்கின்றேன்.

அத்துடன், அரச துறையின் சிறப்புத் துறைகள் தொடர்பிலும் தனியார்துறை தொடர்பிலும் சொல்லப்பட்ட ஆணைக்குழுவின் இணைத் தவிசாளர்களுக்கும் உறுப்பினர் குழுவுக்கும் அவசியமான சந்தர்ப்பங்களின்போது உதவிகள் பெற்றுக்கொள்ளும் பொருட்டு தொடர்புடைய கருமத்திற்கு வரையறுக்கப்படும் வகையில் அந்தந்தத் துறைகளில் நிபுணத்துவ அறிவும் அனுபவமும் கொண்டுள்ள உத்தியோகத்தர்கள் மூவரைக் கொண்டிருக்கும் துணைக் குழுக்களை நியமிப்பதற்கு ஆணைக்குழுவிற்கு இத்தால் நான் தத்துவம் அளிக்கின்றேன்.

அத்துடன் ஆணைக்குழுவினால் ஆலோசனை வழங்கப்படக்கூடிய அல்லது தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு உதவி கோரக்கூடிய எல்லா அரசாங்க உத்தியோகத்தர்களும் அத்தகைய வேறு ஆட்களும் அந்தக் கருமம் தொடர்பாக அத்தகைய ஆலோசனைகளுக்கு அமைவாக செயற்பட வேண்டுமென்றும் அளிக்கக்கூடியவாறான எல்லா உதவிகளையும் அளிக்க வேண்டுமென்றும் அளிக்கக் கூடியவாறான அத்தகைய எல்லாத் தகவல்களையும் கொடுத்துதவ வேண்டுமென்றும் நான் இத்தால் சகல அரசாங்க உத்தியோகத்தர்களையும் ஏனைய ஆட்களையும் தேவைப்படுத்திப் பணிக்கின்றேன்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 33 ஆம் உறுப்புரையின் வண்ணம், என்னால் விடுக்கப்பட்ட இரண்டாயிரத்து ஆறாம் ஆண்டு மாச்சு மாதம் முப்பதாம் திகதிய சனாதிபதி பணிப்புரையையும் அதற்காக இடையிடையே மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் மூலம் தாபிக்கப்பட்ட தேசிய சம்பளங்கள் பதவியணி ஆணைக் குழுவையும் இத்தால் ஒழித்துக்கட்டுகிறேன்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இலட்சனையின் கீழ் இரண்டாயிரத்துப்பதின்மூன்றாம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 31 ஆம் திகதி கொழும்பில் என்னால் அளிக்கப்பட்டது.

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

லலித் வீரதுங்க,
சனாதிபதியின் செயலாளர்.

11-717



இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.